பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

தங்க நகைகளை
கூடிய விலையில் விற்க
நீங்கள் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்!
நியூ ஈழம்
ஜுவல்லரி மாட்
இல 423 (247)
கே. கே. எஸ் வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
இராஜகோபால்
சந்திரன்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை
ரூ. 1-50

தங்க நகைகளை கூடிய
விலையில் விற்க நீங்கள்
நாட வேண்டிய சிறந்த
ஸ்தாபனம்
New Eelam
Jewellery Mart
No. 423, (247)
K. K. S Ro d,
Sivan Kovi addy
Jaffna.
Prop: RAJ KOP L
CHANDRAN

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ பங்குனி மீ 16 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 09 (29 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:40

## தடைப்பட்டதற்குப் பதிலாக
# விசேட ஜீ. சி. ஈ. பரீட்சை குறித்து இன்று முடிவு

## தூதுக்குழு ஹெலி மூலம் விரைந்து ரணிலைச் சந்திக்கின்றது

— அலுவலகச் செய்தியாளர்: சுரேஷ் குமார் —

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெறுமல் தடைப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குப் பதிலாக, விசேட பரீட்சை ஒன்றை நடத்துவது சம்பந்தமாக இன்று முடிவு செய்யப்பட இருக்கிறது,

விசேட பரீட்சையை அடுத்த மாதத்தில் நடத்த வேண்டும் என வற்புறுத்தி, கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரம சிங்காவுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக விசேஷ தூதுக்குழு ஒன்று இன்று காலை ஹெலிக்கொப்டர் விமான மூலம் கொழும்பு விரைகிறது.

பரீட்சை நடைபெறுவதற்குச் சாதகமான முடிவே இன்று கிடைக்கும் என இங்குள்ள கல்வி வட்டாரங்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றன.

ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு செல்லும் தூதுக்குழு அங்கு கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பரீட்சைபற்றிய பேசுக்களை நடத்தி விட்டு இன்று மாலையே யாழ்நகர் திரும்ப உள்ளதாகவும் அறியவருகிறது.

இக்குழுவுக்கு வடபிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் தலைமை வகிப்பார்.

மற்றும் முன்னள் கல்விப் பணிப்பாளர் திரு ரி. மாணிக்கவாசகர், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். ராஜரட்ணம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. கே. ராஜரட்ணம் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஒன்றியச் செயலாளர் திரு என். குகராஜா, யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ் பொன்னம்பலம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி திபர் திரு. எஸ். பி. பாலசிங்கம், யாழ் பரியோவான் கல்லூரி அதிபர் வண பிரான்ஸிஸ் யோசப் அடிகளார் ஆகியோரும் அடங்குவர்

தூதுக்குழுவினர் நடத்தும் பேச்சுவார்த்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐம்பதினாயிரம் பேரின் கையெழுத்து மகஜர் பணிப்பாளரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்29

1987 டிசம்பரில் தடைப்பட்ட ஜீ. சி. ஈ சாதாரண தரப் பரீட்சையை உடனடியாக நடத்தக் கோரி, ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் கையொப்பத்துடனான மகஜர் நேற்று வடபிரதேசக் கல்விப்பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

பரீட்சையை நடத்தக் கோரி, மாணவர் இளைஞர் பொது மன்றம் கையெழுத்து இயக்கத்தை நடத்தி வந்தது தெரிந்ததே.

கையெழுத்து இயக்கத்தின் மூலம் மேற்படி மன்றம் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துக்களைப் பெற்றிருந்தது.

இது தொடர்பாக மன்றம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளதாவது:

அதிபர்கள், ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பல வெகுஜன அமைப்புக்கள் மாணவர் அமைப்புக்கள் ஆகியவை விசேடபரீ

(6ஆம் பக்கம் பார்க்க)

ஓர் அரிய சந்தர்ப்பம்!
தவற விடாதீர்கள்!!

கலர் படச்சுருள் கழுவுதல்
முற்றிலும் இலவசம்!

- கலர் பிரதி ஒன்றுக்கு ரூபா 4/75 மட்டுமே
- கொழும்பில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யபபடுகிறது. மிகத் தரமானது.
- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்.
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்பு:
SHABRA
207, மின்சார நிலைய விதி,
யாழ்ப்பாணம்.

### முச்சந்தி முரளி



அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் எண்டு சொல்லுறவை. அதே மாதிரித் தங்களுக்குள்ளை இருந்த கௌரவப் பிரச்சினையை விட்டுக் கொடுத்து ரணில் நகருவார் எண்டு சொல்லுங்கோ பிள்ளை. -!

## நகரசபைக் கூட்டத்தில் குண்டுகள் வீசப்பட்டன
### 7 உறுப்பினர்கள் காயம்

கொழும்பு, மார்ச் 29

மாத்தறை நகரசபைக் கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது குண்டு வீசப்பட்டது.

இத்தாக்குதலில் 7 நகரசபை உறுப்பினர்களும் 2 நகரசபை ஊழியர்களும் காயமடைந்தனர்

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கூட்டம் நடந்து கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத மூவர் மண்டபத்துக்குள் பிரவேசித்து மூன்று குண்டுகளை வீசிவிட்டு ஓடினராம்.

பொலீஸார் இச்சம்பவம் பற்றி விசாரித்து வருகின்றனர். (ஒ-எ)

### ஜீ. சி. ஈ பரீட்சையை நடத்தக் கோரி
## வடமராட்சி மாணவர் இன்று மௌன ஊர்வலம்

வடமராட்சிப் பகுதியில் மாணவர்கள் மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்றை இன்று நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

1987 டிசம்பரில் தடைப்பட்ட ஜீ சி ஈ. சாதாரண தரப் பரீட்சையை உடன் நடத்தக் கோரியே இந்த மௌன ஊர்வலம் நடைபெறுகிறது.

மாணவர்கள், பெற்றோர் நலன் விரும்பிகள் கலந்துகொள்ளும் இந்த ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலடி குஞ்சர் கடைச்சந்தி, பருத்தித்துறை சிவன்கோவிலடி ஆகிய இடங்களில் இருந்து ஊர்வலங்கள் ஆரம்பமாகும்.

இறுதியில் இவர்கள் மந்திகைச் சந்தியில் ஒன்று கூடி. புலோலி முகாமின் இந்திய அமைதிப்படையின் உயர் அதிகாரி பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரச அதிபர்கள், வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோரிடம் மகஜர்களைக் கையளிப்பர்.

### ஹர்த்தாலினால்
# கிளிநொச்சிப் பகுதி முழு அளவில் ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, மார்ச் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மூன்று நாள் ஹர்த்தாலின் ஆரம்ப நாளான நேற்று திங்கட் கிழமை கிளிநொச்சிப் பகுதி முழு அளவில் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது

கிளிநொச்சியினூடாக நடைபெறும் சகல போக்குவரத்துக்களும் தடைப்பட்டன

வர்த்தக நிலையங்கள் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டு மக்கள் நடமாட்டமின்றி நகரம் வெறிச்சோடியது.

★ சகல தரப்பினரும் சேர்ந்து சமாதானமாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரைவில் முன்வருமாறு இலங்கை இந்திய அரசுகளைக் கோருதல்.

★ தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் சாதாரண அப்பாவி மக்களை இம்சைப் படுத்துதலை நிறுத்துதல்.

★ பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்திற்கு முதலில் முன்வரல்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்காகவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரஜைகள் குழு, பொதுஸ்தாபனங்கள், வர்த்தகர்கள். அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் பொது மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஹர்த்தாலை நடத்துவதாக துண்டுப் பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப் பட்டுள்ளது (இ-76)

சுபநேரம்

29-03-1988
பங்குனி 16
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 43 முதல் 12.13வரை
ராகுகாலம்:
3 13 முதல் 4.43 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## படகுச் சேவை இல்லை

ஹர்த்தால் காரணமாக பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கேரதிவு - சங்குப்பிட்டி படகுச் சேவை மூன்று தினங்களுக்கு நடைபெற மாட்டாது. இத்தகவலை பூநகரி பநோ கூ. சங்கத்தினர் அறிவித்தனர்.

பூநகரி தனியார் போக்குவரத்துச் சங்கமும் மூன்று தினங்களுக்கு சேவை நடத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளது. (இ)

## துப்பாக்கிகளை கோட்டைவிட்ட ஊர்காவல் படையினர்

கரந்தெனியா எம். பி யின் வீட்டைக் காவல் புரிந்துவந்த ஊர்காவல் படையினர் வைத்து இருந்த துப்பாக்கிகளை இனந்தெரியாதவர்கள் அபகரித்துச் சென்றுவிட்டனர்.

இச்சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

காலி மாவட்டத்தில் உரஹா என்னுமிடத்தில் கரந்தெனியா எம் பி யின் வாசஸ்தலம் உண்டு

ஊர்காவல் படையைச் சேர்ந்த ஐவர் அங்கு காவல் புரிந்து வந்தனர்

இராணுவச் சீருடை தரித்தவர்கள் அவர்களை அணுகி "துப்பாக்கிகளைத் தருங்கள் பரிசோதனை செய்ய வேண்டும்" என்று கேட்டனர்.

உயர் இராணுவ அதிகாரிகள் என்று நம்பி அவர்களிடம் ஊர்காவல் படையினர் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனர்

பின்னர் தான் தெரியவந்தது, ஏமாற்றப் பட்ட சங்கதி. (ஒ—எ)

# அடகு நகை மீளளிப்பு வேலை நேற்று ஆரம்பம்

—அலுவலகச் செய்தியாளர்: சண். ஜோண்சன்—

யாழ்ப்பாணம், மார்ச் 29

மக்கள் வங்கிக்கிளைகளில் அடகு வைக்கப்பட்டு திருப்பி வழங்குவதில் இழுபறி நிலையில் இருந்து வந்த நகைகள் உரியவர்களிடம் வழங்கும் வேலை நேற்று ஆரம்பமானது

நேற்றைய தினம் 145 பேர் தமது நகைகளைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ் ஸ்ரான்லி வீதி, யாழ் பிரதான வீதி ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளிலேயே மீளளிப்பு நடைபெற்றது

பிரதான வீதிக்கிளையில், இசேகிளையினதும், புங்குடுதீவு கிளையினதும் 83 பேரின் நகைகளும் —

ஸ்ரான்லிவீதியில் இதே கிளையின் 63 பேரின் நகைகளும் நேற்று வழங்கப்பட்டன.

நேற்று வழங்கிய நகைகளின் ஒவ்வொரு தொகுதியும் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட மீளளிப்பு தேவையைக் கொண்ட நகைகள் என்றும் —

இன்றைய வழங்கியதில் எந்த வித பிரச்சினையோ இடையூறுகளோ இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது யாழ். குடாநாட்டின்சகல குதிகளுக்குமான நகைகளும் மேற்படி இருவங்கிக்கிளைகளில் வைத்தே வழங்கப்படுகின்றன.

இந்தப் பரீட்சார்த்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹிந்திப் பெயர்ப்பலகை

பலாலி — யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் சில தனியார் பஸ்களில் ஹிந்தியில் பெயர்ப்பலகை எழுதப்பட்டுள்ளது.

இந்திய அமைதிப்படையினரின் சோதனை நடவடிக்கைகளுக்கு வசதியாகவே இவ்வாறு ஹிந்தியில் பெயர்ப் பலகைகள் எழுதப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-10)

## திருமலைப் பகுதியில் சிங்களவர் மீண்டும் வந்து குடியமர்வு

திருகோணமலை, மார்ச்29

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வெளியேறி இருந்த சிங்கள மக்கள் மீண்டும் அப்பகுதிகளில் குடியமரத் தொடங்கியுள்ளனர்.

சிங்களக் கிராமங்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கத் தொடங்கியதை அடுத்து முன்னர் வெளியேறிய சிங்கள மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்துள்ளனர்

சிங்களக் கிராமங்களில் இடம் பெற்ற தாக்குதல்களை அடுத்து கடந்த வாரம் முதல் ஆயிரக்கணக்கான ஸ்ரீலங்காப் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது தெரிந்ததே

இதேவேளை, ஸ்ரீலங்கா படையினர் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குள் பிரவேசிக்க முடியாது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் நாளை ஹர்த்தால்
### நடத்த மாணவர் ஏற்பாடு

தென்மராட்சிப் பகுதியில் நாளை 30 ஆம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளை தென்மராட்சி மாணவர் ஒருங்கமைப்புக் குழு மேற்கொண்டுள்ளது.

★ தடைப்பட்டிருக்கும் ஜீ சி ஈ பரீட்சையை தாமதமின்றி நடத்தப்பட வேண்டும் —

★ இந்திய அரசானது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்காகக் கால தாமதமின்றி நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தவேண்டும் —

★ இந்திய அமைதிப் படை எம்மால் நடத்தப்படுகின்ற அஹிம்சைப் போராட்டங்களுக்கு எந்த வகையிலும் தடை விதிக்கக் கூடாது

★ இந்திய அமைதிப் படையினரால் மாணவர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்படுவதுடன் கைது செய்யப்பட்ட மாணவர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மலைநாட்டு ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி பொது அறிவு பொது உளச்சார்பு' வெளியீடு அஸ்ரன் பதிப்பகம் விலை ரூபா 49 / 90 பூபாலசிங்கம், சிறீலங்கா; சுப்பிரமணிய, புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (2143)

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட நல்ல பாவிப்பில் உள்ள 2 கதவு குளிர்சாதனப் பெட்டியும் 12 அங்குல கறுப்பு வெள்ளை தொலைக்காட்சி பெட்டியும் உடன் விற்பனைக்கு உண்டு. ஜவ்னா எலேற்றோ பிளேட்டஸ், 7, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (2687)

Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள் 29-03-88 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் (lohmann) பிறவுன் பேடு ரூ 12. 50 [Lohmann]சேவல் ரூ4.00 (சொண்டு வெட்டப்பட்டது, தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்யவும். இல 9, சூராவத்தை ரோட்டு [கந்தையா லேன்] சுன்னாகம் [ஸ்டேசனுக்கு அண்மையில்] (2693)

திறம் நீணுவில் புகையிலைப் பாடம் விற்பனைக்கு பிரித்துக் கொடுக்கப்படும் தொடர்பு ஸ்ரீமுருகன் மரத்தொழிலகம A சனசரட்ணம் 145. நாவலர் ரோட் யாழ்ப்பாணம். (2229)

1 நாள் பிரவுண் பேட்டுக் குஞ்சும் கறுப்பு சேவல் குஞ்சும் 29-3-88 இலும் புறொயிலர் குஞ்சு 30-3-88 இலும் விநியோகிக்கப்படும் விபரங்களுக்கு: R S.K Farm, Murugapathy, Uduvil. 2 குமரன்ஸ் ஸ்டோர்ஸ் கொக்குவில்சந்தி. கொக்குவில் 3 Farm House, கோட்ரோட், மல்லாகம் 4. இணுவில் வீடியோ சென்ரர், இணுவில். (2224)

ஒருமாத இரண்டு கிழமை, ஒரு கிழமை, பிறவுண் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும் ஒரு கிழமை பிறவுண் சேவல் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: R S K. Farm, Murugapathy, Uduvil. குமரன் ஸ்டோர்ஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில். [2225]

Uplands Farm Ltd. கோழிக்குஞ்சு விநியோகம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை 15 நாள் வளர்ச்சி (Lohmann) சேவல் குஞ்சுகள் விற்கப்படும். விலை ரூ 12-50 உடன் பதிவு செய்க No. 9 சூராவத்தை ரோட். கந்தையா லேன், சுன்னாகம் ஸ்ரேசனுக்கு அருகாமையில். [2709]

### காணவில்லை

388040114V இலக்கமுள்ள அடையாள அட்டை தவறிவிட்டது தயவு செய்து இதனை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முகவரி திருமதி S பாலச்சந்திரன் யூனியன் கல்லூரி தெல்லிப்பழை (2234)

### வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் வீடு நல்ல குடிநீர் வசதியுடன் வாடகைக்கு உண்டு தொடர்பு விளம்பர இல, 115 C/o உதயன். (2218)

### TRAINNING

Computer Traineees பலர் உடன் தேவையாதலால், ஏற்கனவே 'Basic' Programming பயின்றவர்களுக்கு குறுகிய கால சிறப்புப் பயிற்சி I B M Computerகளிலும் 450 ரூபா கட்டணத்தில், 4-4-1988 (2-30 p.m.) இற்கு ஆரம்பமாகின்றது தொடர்புகளுக்கு:- IDP Tellippalai.

### தேவை

#### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த வயது 30 B. Sc சிவில் பொறியிலாளர் கனடாவில் பிரஜா உரிமையுடைய மணமகனுக்கு B Sc பட்டதாரி பெண்தேவை நட்சத்திரம் சித்திரை செவ்வாய் 7ல்; தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் ரோட் ஆனைப்பந்தி. (2221)

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய B Sc சிவில் பொறியிலாளர் நட்சத்திரம் மிருகசீரிடம் பெண் தேவை சீதனம் எதிர்பார்க்கப்படும் தொடர்பு A B C D E விவாகப் பொருத்துனர் 328 நாவலர் ரோட் ஆனைப்பந்தி. [2222]

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த ஓமானில் வேலை செய்யும் 24 வயது நிரம்பிய மணமகனுக்கு பெண் தேவை நட்சத்திரம் அவிட்டம் செவ்வாய் 2ல் தொடர்பு A B C D E விவாகப் பொருத்துனர் 328 நாவலர் ரோட் - ஆனைப்பந்தி நேரம் 9மணியில் இருந்து 2மணி வரை எந்நாளும் (2223)

#### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த Dental டாக்டராக கடமைபுரியும் [30 வயது] பெண்ணுக்கு தகுதியான மணமகனை எதிர்பார்க்கின்றேன் வெளி நாடு செல்பவர்களும் விரும்பத்தக்கது விளம்பர இலக்கம் 116, C/o உதயன் [2226]

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்தவரும் Assistant Accountant ஆக தொழில் புரிந்தவரும் 28 வயதுடைய எனது சகோதரிக்கு தகுதியான மணமகனை எதிர்பார்க்கிறேன். வெளிநாட்டில் வசிப்பவர்களும் வெளிநாடு செல்ல தயாராக உள்ளவர்களும் விரும்பத்தக்கது விளம்பர இலக்கம் 117, C/O உதயன்.

### வகுப்புக்கள்

Spoken English வகுப்புகள் 5-4-1988 இல் ஆரம்பமாகின்றன. தொடர்புகளுக்கு:- எடியுகேசன் சென்ரர், மகேன் ரோட், நவாலி, மானிப்பாய் (2150)

G.C.E. O/L -ல் கட்டாயபாடமாகிய கணித பாடத்தினை 19 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் குறைந்த காலத்தில் நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும் மற்றும் கொழும்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் கல்வி பயின்ற ஆசிரியரினால் Spoken English-ம் சிறந்த முறையில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி 2195

எமது நிறுவனத்தில் May மாதம் நடைபெறஇருக்கும் Typing, Shorthand (London) பரீட்சைகளுக்கான முடிவு திகதி April 10 பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் பணமும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
Steno-Typist Academy, College Lane, Vaddukoddai (2197)

Radio, T.V. air Conditioning Refrgeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங், Spoken English, Typing, சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். [2217]

### சேவை

#### போட்டோ ஸ்ராட்

யாழ்நகரில் தரமான "போட்டோஸ்ரட்" பிரதிகளுக்கும் தெளிவான 'ரோனியோ' வேலைகளுக்கும்" சிறந்த முறையிலான தமிழ், ஆங்கிலம் 'ரைப்பிங்' வேலைகளுக்கும் என்றும் நம்பிக்கையான நிறுவனம்; கிளின்கட், இல; 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

#### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna. (Near Samy & Co.) (1803)

#### போட்டோ ஸ்ரற்

போட்டோ ஸ்ரற், ரோனியோ, தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும். "சுப்பசனன்" 13, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். [2167]

### ஜனாதிபதி மீதான

## வழக்கு விசாரணையை நிறுத்தும்படி விண்ணப்பம்

ஜனாதிபதி ஜெவர்த்தன மீது எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தொடர்ந்த அவதூறு வழக்கு விசாரணையை நிறுத்தும்படி கொழும்பு மாவட்ட நீதிபதிக்கு உத்தரவிடும்படி உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

ஜனாப். எம். எப் ஏ. மசூர் என்பவர் இந்த விண்ணப்பத்தை கடந்த வெள்ளி கிழமை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்

ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு எதையும் தாக்கல் செய்ய முடியாது என்று அரசமைப்புச் சட்டம் கூறுவதாக விண்ணப்பத்தில் காரணம் காட்டப்பட்டு உள்ளது

இந்த அவதூறு வழக்கில் ஜனாதிபதியிடம் இருந்து 10 கோடி ரூபாவை நஷ்டஈடாக திரு. அனுரா பண்டாரநாயக்கா கோரி இருக்கின்றார். (ஓ-எ)

Computer course
நெல்லியடியில்!
31 - 03 - 1988
Time: 1.30 p.m. Duration: 1½ Month
IDP
C/o Modern Education Centre
KARAVEDDY.

Computer Course
யாழ்நகரில்!!
02 - 04 - 1988
Fees: Rs 400
Time: 2.00 p.m. Duration: 1½ Month
IDP
C/o Bond Institute
294/2, Hospital Road, JAFFNA.

# நல்லூர் பிரதேச சபை பொது அறிவித்தல்

## புதிய மின் கட்டணம்

1 1 88ஆம் திகதி தொடக்கம் மின் சக்தி, எரிபொருள் அமைச்சின் பணிப்பின் பிரகாரம் நல்லூர், கொக்குவில் பிரதேசத்தில் புதிய விகிதாசாரப்படி மின் கட்டணங்கள் அறவிடப்படும் எனப் பொதுமக்களுக்கும், மின்நுகர்வோருக்கும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது. எனவே இவ்வுயர்ச்சியினைக் கருத்திற் கொண்டு மின்பாவனையாளர்கள் தங்கள் மின் நுகர்ச்சியை விண்விரயம் செய்யாமல் கட்டுப்பாட்டுடனும், அளவுடனும் உபயோகித்துப் பணவிரயங்களைக் கட்டுப்படுத்துமாறு அன்புடன் வேண்டுகிறேன்,

### (1) வீட்டுப்பாவனைக்குரிய இறுப்புக்கட்டணம்

(1) இந்த இறுப்பனவு தனியார் வசிப்பிடங்களில் மின்சாரத்தை வீட்டுப்பாவனைக்காகப் பாவிப்பவர்களுக்கும் (11) அப்படியான வீடுகளில் 25%க்கு மேற்படாத இடப்பரப்பினை (ஆகக்கூடிய 400 சதுர அடி) ஏதும் வியாபாரம் அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிப்போருக்கும் பொருந்தும்.

[அ] மாதாந்த நிலையான கட்டணம் ரூபா 5/ ம்
[ஆ] 1-10 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு... -/75 சதமும்
[இ] 11 100 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு...ரூபா 1/20ம்
[ஈ] 101-450 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு...ரூபா 2/25ம் அத்துடன் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் எரிபொருட் சிராக்கல் கட்டணமும்.
[உ] 450 அலகுகளுக்கு மேல், அலகொன்றுக்கு ரூபா 2/50ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

மேலும்

(11) வியாபார நோக்கத்திற்காக அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் இடப்பரப்பிற்காக (25%) மேலதிகக் கட்டணம் கீழ் வரும் விகிதாசாரப்படி அறவிடப்படும்,

200 சதுர அடி வரையும்... ரூபா 30/-
200-300 சதுர அடி வரையும்... ரூபா 40/-
300-400 சதுர அடி ... ரூபா 50/-

### (2) சமய சம்பந்தமான இடங்கள், அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கான இறுப்பு

இவை பகிரங்க வணக்கத்தலங்கள், இத்தலங்களுக்குள் அல்லது இத்துடன் சேர்ந்துள்ள இடத்திலுள்ள பூசகரின் வசிப்பிடம், சமூக சேவைப் பணிப்பாளரினால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள் முதியோர், அநாதை மடங்கள், வலது குறைந்தோர் விடுதிகள் போன்றவற்றுக்கான இறுப்பாகும்

(அ) மாதாந்த நிலையான கட்டணம்...... ரூபா 5/-ம்
(ஆ) முதல் 150 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு /75 சதமும்
(இ) 150க்கு மேற்பட்ட அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா.. 2/ 25ம்

எரிபொருள் சிராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

அல்லது

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள், சமய வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றிற்கான 1-3-85ஆம் திகதி தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச்சலுகையைப் பெற்று வந்தவர்களுக்கு 1987ம் ஆண்டின் சராசரி மாதாந்த நுகர்ச்சியின் அலகுகளின் அலகொன்றிற்கு சதம் -/75ம் (எரிபொருள் கட்டணம் விலக்கப்பட்டுள்ளது) இச்சராசரிக்கு மேற்பட்ட அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/25 ம் அதற்கான எரிபொருட் சிராக்கல் கட்டணமும் விதிக்கப்படும்

### (3) வீதி வெளிச்சம்

பிரதேச சபையால் ஈடு செய்யப்படும்.

### (4) பொது நோக்கங்களுக்கான இறுப்பனவு

இவை கடைகள், அலுவலகங்கள், வங்கிகள், பண்டகசாலைகள், பொதுக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள். பொழுதுபோக்கு இடங்கள் மேலும் இதுபோன்ற இடங்களுக்குப் பொருந்தும்

4-1. மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி ஏ க்கும் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்துவன.
(அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றுக்கு ரூபா 2/25ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்
(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்.
5 கே வி ஏ. வரையும் ரூபா 30/-
5 கே. வி ஏ. தொடக்கம் 10 கே வி ஏ. வரையும் ரூபா 60/-
10 கே வி ஏ. க்கு மேல் 50 கே. வி. ஏ க்குக் குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்.

4-2. மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்துவன.
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/-ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே. வி. ஏ ஒன்றுக்கு ரூபா 150/- வீதப்படியும்
(இ) நிலையான கட்டணம் ரூபா 300/00ம் அறவிடப்படும்.

### (5) கைத்தொழில் இறுப்பனவு

இவை முழுமையாகவோ அல்லது பிரதானமாகவோ தொழிற்சாலைகள், தொழிற்களங்கள், வார்ப்புச்சாலைகள், எண்ணெ ஆலைகள், நூற்புநெசவு நிலையங்கள், பம்புநிலையங்கள், துறைமுக கப்பல் தங்குமிட நிர்மாணங்கள் மற்றும் இதனையொத்த கைத்தொழில் நிர்மாணங்களுக்கான மின் இரசாயன மின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

5-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ. க்குக் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.
(அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றிற்கு ரூபா 2/-ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்,
5 கே வி ஏ. வரையும் ... ... ரூபா 30/-
5 கே. வி. ஏ. தொடக்கம் 10 கே. வி. ஏ. வரையும் ரூபா 60/-
10 கே. வி. ஏ. க்கு மேல் 50 கே. வி. ஏ. குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்.

5-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்.
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/-ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே.வி.ஏ. ஒவ்வொன்றிற்கும் ரூபா 125/- வீதமும்.
(இ) நிலையான கட்டணம் ரூபா 250/-ம் அறவிடப்படும்.

### (6) ஹோட்டல் இறுப்பனவு

இவை உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் அதனையொத்த இடங்களுக்குப் பொருந்தும்.

6-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி ஏ. க்கு குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்,
(அ) அலகு ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/20 அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்
5 கே. வி ஏ வரையும்......... ரூபா 30/-
5 கே வி. ஏ தொடக்கம் 10 கே. வி ஏ. வரையும் ... ரூபா 60/-
10 கே. வி. ஏ க்கு மேல் 50 கே வி. ஏ. க்குக் குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்

6-2. மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி ஏ. க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்தும்.
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/10 ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத்தேவையின் கே. வி. ஏ ஒன்றுக்கு ரூபா 150/- வீதப்படியும்.
(இ) நிலையான கட்டணம் ரூபா 200/-ம் அறவிடப்படும்.

### (7) தற்காலிக மின்விநியோகம்

(அ) அலகு ஒன்றிற்கு ரூபா 3/-ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) பொருட்களின் வாடகையாக, பெறுமதியின் 10%மும்
(இ) கூலிகள், மேற்பார்வைக் கட்டணமும்
(ஈ) நுகர்ச்சிக்கான முற்வைப்புப் பணமும் அறவிடப்படும்.

### (8) பொது அறவீடுகள்

(1)
(அ) புதிய நிறுவுதல்களுக்கு ஏற்கனவே உள்ள நிறுவுதல்களின் விஸ்தரிப்புகளுக்கும் - முதல் சோதனை இலவசம்
(ஆ) முதல் சோதனை திருப்தியளிக்கவில்லையாயின் ஒவ்வொரு மேலதிக சோதனைகளுக்கும்.
ஒரு நிலை நிறுவுதல் ......... ரூபா... 50/-
மூன்று நிலை நிறுவுதல்...... ரூபா... 150/-

(2) மானிப்பரிசோதனை
பாவனையாளரின் வேண்டுதலின் பேரில் மானிப் பரிசோதனை ரூபா 10/-
(மானியம் செம்மை இல்லாத தன்மை 2½ சதவீதத்தை விட கூடவோ அல்லது குறைவாகவோ காட்டுமேயானால் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்.)

(3) கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான விதிப்பனவுகள்
பாவனையாளர் ஒருவரின் மின்சார விதிப்பனவுக் கணக்குகள் 30 நாட்களுக்கு மேல் நிலுவையாக உள்ள சந்தர்ப்பத்தில் அம்மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்குக் கட்டளை இடப்படும். துண்டிப்புக் கட்டளை இடப்படுமாயின் நிலுவைத் தொகையுடன் அதன் 10 சதவீத மேலதிகக் கட்டணமும் அத்துடன் துண்டிப்பு நடவடிக்கை எடுக்கும் கட்டணமாக ரூபா 100 / 00ம் அறவிடப்படும்.

(4) ஒழுங்கு விதிகளை மீறுபவர் மீது மானிகளில் மாற்றங்கள் செய்தல், மானி முத்திரைகள், கட்அவுட் முத்திரைகளை சேதப்படுத்துதல் இவை போன்றவை) அவர்களது மின்சாரம் துண்டிக்கப்படுவதுடன் ரூபா 2000 / - விதிப்பனவு அறவிடப்பட்டு மானியின் பதியப்படாத மின்பாவனைக்காகக் கட்டணம் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு அக்கட்டணத்துடன் 25% மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும் மதிப்பீட்டு முறையும் காலமும் சபையின் தன்விருப்பு உரிமையைப் பொறுத்தது.

(5) சட்ட விரோத மின் விஸ்தரிப்புக்களை வேறு கட்டடங்களுக்கு (மீற்றர் மூலம்) கொடுத்தலுக்காக மேலதிகக் கட்டணமாக ரூபா 250 / - அறவிடப்படும்.

(6) பாவனையாளர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டபின் மீண்டும் விநியோகம் வழங்குவதற்கு கட்டணம் ரூபா 100 / - அறவிடப்படும்

(7) மின்சாரம் தடைப்படும் போது, சேவையின் உருகியை மீளப் பொருத்துவதற்காக.
ஒரு நிலைக்கு ...... ரூபா 10 / - ம்
மூன்று நிலைக்கு ......ரூபா 20 / - ம் அறவிடப்படும்

இது விடயமாக இன்னும் பூரண விளக்கம் தேவையாயின் நல்லூர் அல்லது கொக்குவில் அலுவலகங்களில பெற்றுக் கொள்ளலாம். காலதாமதமாகச் செலுத்தப்படும் நிலுவைப் பணங்களுக்கு மேலதிகப் பணம் செலுத்த வேண்டியதுடன், துண்டிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும ஏற்பட இருப்பதால் தயவு செய்து மாதாந்த சிட்டைகள் வரும்வரையும் காத்திராமல் மாதாந்தம் தவறாமல் குறைந்தது ஒரு சராசரித் தொகையைத் காரியாலயத்திற்குச் சென்று செலுத்திவருவதால், மேலே கூறிய மேலதிகப்பணமோ அல்லது துண்டிக்க வேண்டிய சந்தர்ப்பத்தையோ சுலபமாக விலக்கிக் கொள்ளலாம் எனவும ஆலோசனை கூறவிரும்புகின்றேன்.

24-3-1988

**கந்தையா சண்முகநாதன்**
விசேட ஆணையாளர்
நல்லூர் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாக் கவர்ச்சியை வைத்து அரசியல் லாபம் தேட முடியுமா?

## சிவாஜியும்—ஜெயலலிதாவும் தப்புக்கணக்கு என்கிருர் மூப்பனுர்

**சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன்**

சென்னை, மார்ச் 28 சினிமாக் கவர்ச்சியை வைத்து அரசியல லாபம் தேடலாம் என்று சிவாஜியும், ஜெயலலிதாவும தப்புக்கணக்குப் போடுகிருர்கள்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் மூப்பனுர் ''இதயம் பேசுகிறது'' வாரப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினுர்.

பேட்டி விவரம் வருமாறு:-

### தப்புக்கணக்கு

கேள்வி:- தமிழ்நாட்டு அரசியலில் சினிமாத்



சிவாஜி

துறையைச் சார்ந்தவர்கள் அதிகமாகப் பங்கேற்கிருர்கள். காங்கிரஸில் இருந்த பிரபல நடிகர் ஒருவரும் போய்விட்டார். இந்த நிலையில் பிறகட்சிகளின் சினிமாக் கவர்ச்சி அரசியலை காங்கிரஸ் எப்படிச் சமாளிக்கப்போகிறது?

பதில்:- எம். ஜி. ஆர். சினிமாத் துறையிலிருந்து வந்து அரசியலில் சாதனை செய்தார் என்பதால் சினிமாத்துறையைச்சேர்ந்த அத்தனை பேரும் (ஜயலலிதா - சிவாஜி) அவரைப் போல் அரசியலில் ஏதாவது செய்துவிடுவார்கள் என்று எண்ணுவது தப்புக்கணக்கு

### சினிமாக் கவர்ச்சி

எம். ஜி ஆர் ஆரம்பத்திலிருந்தே பொது வாழ்க்கைக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் வளர்த்துவந்தார். அசலில்தான் நடிக்கிற கதாபாத்திரங்களைக் கூடக் கவனமாகத் தேர்ந்தெடுத்தார்.

ஒரு கட்டத்தில் அரசியலுக்கு வந்தார் வேகமாக வளர்ந்தார். ஆட்சியைப் பிடித்தார்

பத்தாண்டு காலம் ஒரு மலையைப் போய் ஆட்சியில் அசையாமல் இருந்தார்.

அவரை மக்கள் ஆதரித்தார்கள் என்பதற்காக, மக்கள் அரசியல் முடிவுகளையே சினிமாக் கவர்ச்சி அடிப்படையில் தான் எடுக்கிருர்கள் என்று யாரும எண்ணுவது தவறு.

### அரசியல்

அரசியல் கருத்துக்கள் என்ற மருந்தில் சினிமாக் கவர்ச்சி என்ற இனிப்பைத் தடவிக் கொடுத்தால் மக்கள் அரசியலை இலகுவாக ஏற்றுக்கொள்வார்கள் என்பது வேண்டுமானுல் உண்மையாக இருக்கலாம்.

ஆனுல் சினிமாக் கவர்ச்சியை வைத்தே அரசியல் முடிவுகளைத் தீர்மானிக்கிருர்கள் என்றுசொல்லமுடியாது.

மக்கள் சினிமாவைவிட அரசியலை உயர்வாக மதிக்கிருர்கள் என்று நம்புகிறேன்.

### சிவாஜியுடன் போட்டியா?

கேள்வி:- மூப்பனுர் எங்கே போட்டியிட்டாலும் எதிர்த்துப் போட்டியிடுவேன் அவரைத் தோற்கடிப்பேன் என்று சிவாஜிகணேசன் சொல்லியிருக்கிருரே?

பதல்: அரசியலில் தனிப்பட்ட போட்டிக்கு இடமில்லை எனக்கும் அவருக்கும் தனிப்பட்ட முறையில் என்ன சண்டை?

### வருத்தம்

கேள்வி: காமராஜருக்கு அடுத்து தமிழ்நாடு முழுக்கத் தெரிந்தவர் சிவாஜிதான். அவர் கட்சியை விட்டுப்போனது காங்கிரசுக்கு இழப்புத் தானே?

பதில்: சிவாஜி போன்றவர்கள் காங்கிரசை விட்டுப் போனதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆனுல் சொந்தக் காரணங்களை மனதில் வைத்துக் கொண்டு போகிறவர்களை என்ன செய்யமுடியும்?

### மரியாதை

கேள்வி; தனக்கு உரிய மரியாதை தரவில்லை என்ற காரணத்துக்காகவே கட்சியை விட்டு



ஜெயலலிதா

வெளியேறினுர் சிவாஜி என்பது அவரது பேச்சுக்களில் தெளிவாகிறது

மேலிடத்தோடு தொடர்பு கொள்ள முடியாமலும் தடுத்து விட்டார் மூப்பனுர் என்கிருர் இதுபற்றி...?

பதில்; அரசியலில் தனிப்பட்ட முறையில் மரியாதை எதிர்பார்க்க முடியாது. ஒரே ஒரு முறை மட்டும் என்னை அணுகி பிரதமரோடு தனியாகப் பேச வேண்டும், நேரம் ஒதுக்கித்தருங்கள் என்ருர் வாங்கிக் கொடுத்தேன். வேறு எப்போதும் எதற்காகவும் என்னை அவர் அணுகவில்லை.

### ஜானகி அரசு

கேள்வி:- 97 எம். எல். ஏக்கள் ஆதரித்த ஜானகி அரசு சிறுபான்மை அரசு என்ருல் 60 பேர் கொண்ட மேகாலயா சட்டமன்றத்தில் 22 பேர் கொண்ட காங்கிரஸ் ஆட்சி அமைத்தது சரியா?

பதில்:- அங்கு சிறுபான்மை அரசு இருப்பதாகச் சொல்லுவது தவறு.

60 பேர் கொண்ட சட்டசபையில் 22 பேர் கொண்ட காங்கிரஸ் கட்சியை ஆட்சி அமைக்க கவர்னர் அழைத்தார். சட்டசபையில் பெரும்பான்மையை நிருபிக்கச் சொன்னுர்.

காங்கிரஸ் சட்டசபையில் 34 எம் எல். ஏக்கள் ஆதரவோடு தனது பெரும்பான்மையை நிருபித்தது

ஆனுல் தமிழ்நாட்டில் என்ன நடந்தது?

234 பேர் கொண்ட சட்டசபையில் 97 எம் எல் ஏக்கள் ஆதரித்த ஜானகி அணியை கவர்னர் ஆட்சி அமைக்க அழைத்தார். சட்டப்படி அது சரி ஆனுல் ஆட்சி அமைத்தவர்கள் பொறுப்பேற்று ரெண்டுபடி சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிருபித்திருக்க வேண்டும்.

அதை விடுத்து 97பேர் ஆதரவே பெரும்பான்மை என்று வாதிடுவது தவறு மற்ற கட்சிகள் எதிர்த்து வாக்களிக்கவில்லை என்பதாலேயே 234 பேர் கொண்ட சட்ட சபையில் 97பேர் பெரும்பான்மை ஆகிவிட முடியாது.

### ஆதரிக்கவில்லை

கேள்வி: அதற்காக 33 பேர் கொண்ட ஒரு குழுவை ஜெயலலிதா அணியை காங்கிரஸ் ஆதரித்தது சரியா?

பதில்: 33 பேரை நாங்கள் எங்கே ஆதரித்தோம்? 33 பேரைத் தான் சபாநாயகர் பதவி நீக்கம் செய்து விட்டாரே?

### கூட்டணி

கேள்வி:- தமிழ்நாட்டில் காங்கிரஸ் யாருடனுவது கூட்டு சேருமா?

பதில்:- கூட்டணி பற்றிப் பேசுகிற சிந்தனையே இப்போது எனக்கில்லை. கூட்டணி பற்றி காங்கிரஸ் தொண்டர்கள் கேட்டபோது கூட கூட்டணி பற்றி இப்போது பேச வேண்டாம் காங்கிரஸ் வேலையைப் பாருங்கள் என்று தான் சொல்லி இருக்கிறேன்

### தேர்தல் வருமா?

கேள்வி:- தேர்தல் உடனடியாக வராதுபோலிருக்கிறதே?

பதில்:- ஏன் வராது? சட்ட சபையில் அமளி ஏற்பட்ட அன்றைக்கே உடனடியாகத் தேர்தல் வேண்டும் என்று அறிக்கை விட்டது. தேசிய சிங்கான் தமிழ்நாடு காங்கிரஸ்பொறுப்பாளர்

### பலவீனமா

கேள்வி:- ஆரம்பத்தில் அப்படி சொல்லியிருக்கலாம் இப்போது சூழ்நிலை மாறியிருக்கிறது உங்களை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக ஆக்கியிருப்பது காங்கிரசை பலப்படுத்திவிட்டு பிறகு தேர்தல் நடத்தும் உத்தேசத்தில் தான் என்றும் சொல்லுகிருர்களே?

பதில்;- காங்கிரஸ் பலவீனமாக இருக்கிறது என்று சொல்வதே சரியில்லை 84 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் 70 இடங்களில் போட்டியிட்டு 14 சதவிகித வாக்குகள் பெற்றது. 150 இடங்களில் போட்டியிட்ட எம். ஜி ஆர் கட்சி 37 சதவிகித வாக்குகள் பெற்றது

234 தொகுதிகளிலும் காங்கிரஸ் போட்டியிட்டிருந்தால் எவ்வளவு சதவிகித வாக்குகள் பெற்றிருக்கும்? அ. தி. மு. க. தனித்துப் போட்டியிட்டிருந்தால் அ-தி-மு-க எவ்வளவு வாக்குகள் பெற்றிருக்கும்? என்று நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள் காங்கிரஸ் இதைவிட அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கும் என்று நான் நம்புகிறேன்

### முதல் அமைச்சர் யார்?

கேள்வி:- காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தால் யார் முதலமைச்சர்?

பதில்:- முதலமைச்சர் பதவி என்ன சார் முதலமைச்சர் பதவி... காங்கிரஸ் ஆட்சிக்கு வர

([illegible] ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலிருந்து


**Shamrock Academy**

No. 247, Hospital Road,
CHUNDIKULI — JAFFNA.

1990 Aug A/L கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன. ஆர்வம் உள்ள மாணவர்கள் அனுமதிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்,

விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். (2207)



**Vacancy for Book-Keeper**

யாழ்ப்பாணத்தில் உள்ள தரம் வாய்ந்த தொழிற்சாலைக்கு Book-keeper ஒருவர் கீழ் வரும் தகமைகளுடன் தேவை. அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

[ ] I. A. A. அல்லது அதற்குச் சமமான பரீட்சையில சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

[2] ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

[3] வயது 20-30க்கு இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

அனுபவத்திற்கும் திறமைக்குமேற்ப சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 4 - 88

விளம்பர இல:- 104.

C/o உதயன், யாழ்ப்பாணம்.

(2685)







★ ஷப்ரு ★

பூலிக்கோ பிஞன்ஸ் லிமிட்டெட் வழங்கும்

**நிலையான முதலீட்டுத்திட்டம்**

✯ குறைந்த வைப்புத் தொகை 1000/-
✯ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-




| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-
✯ பணமாக ✯ காசோலையாக ✯ வங்கிக் கணக்கூடாக

**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

இயக்குநர் சபை

★ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
★ ஜே. டி நவரட்ணம், A I B (Lon)
★ வீ. பி. ஈ. கருணரட்ண, (சட்டத்தரணி)
★ ஆர். பாலசுப்பிரமணியம்
★ ஓ. சி. எம் ஹசன்பாரி, B A

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

**ஷப்ரு நிதி நிறுவனம்**

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310, 500576

யாழ். முகவர்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேவை

மின்தறி, கைத்தறி தொழிலாளர்

1. மின்தறி நெசவில் குறைந்தது 02 வருட அனுபவமுள்ள மின்தறி பெண் நெசவாளர்
2. கைத்தறி நெசவில் குறைந்தது 03 வருட அனுபவமுள்ள கைத்தறி பெண் நெசவாளர்

உடன் நேரில் வரவும்.

தெல்லிப்பளை மின்தறி நெசவு நிலையம்
ஆனைக்குட்டி மதவடி, தெல்லிப்பளை.

(2119)


பாதிக்கப்பட்ட

# மாணவர்களுக்கான நிவாரணப் பொருள் வழங்க முடியாத நிலை

யாழ்ப்பாணம் மார்ச் 29

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கென தருவிக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருள்களை வழங்க முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணப் பொருள்களை குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் யாழ் செயலகம் ஊடாக வழங்க விரும்புகிறது.

சகல பாடசாலை அதிபர்களுக்கு ஊடாகவும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டதாகவும் அந்தப்படியாலு குஏற்ப நிவாரணப் பொருள்கள் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நிவாரணமாக மாணவர்களுக்கு தலா 4 சோடி சீருடைகளும் கணித உபகரணங்கள் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுது கருவிகள் என்பனவும் விநியோகிக்கப்பட உள்ளன. (இ-9)

● இவர்களுக்கும்

## எய்ட்ஸ் பரிசோதனை

கொழும்பு, மார்ச் 28

தமிழ் மன்னார் இறங்குதுறையில் வந்திறங்கும் அகதிகளுக்கு எய்ட்ஸ் நோய்ப் பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

அவர்களிடமிருந்து பெறும் மாதிரி இரத்தத்தை விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கும்படி இராணுவத்தைக் கேட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

20-30வயதுக்கு இடைப்பட்டவர்களிடம் இருந்து எடுக்கப்படும் மாதிரி இரத்தமே எய்ட்ஸ்நோய் பரிசோதனைக்குட்படுத்தப்படும். (ஒ எ)

## SCIENCE ACADEMY

(B. M. C. க்கு முன்பாக)
Jaffna.

**DAY CLASS** காலை வகுப்பு

**பௌதிகம்: Mr. மணியம்** B.Sc

- ✶ மின்னோட்டத்தின் காந்த விளைவு (காந்தவியல்)
- ✶ மீள்தன்மை ஈர்ப்புப்புலம்
- ✶ HEAT கலோரிவியல் (துரித மீட்டல்)

**DAY CLASS** (மாலை)

பௌதிகம்:
Mr சோதிலிங்கம் B. Sc.

1-30 சடப்பொருளியல் (துரிதமீட்டல்)
2-30 வெப்பவியல்
12-30 ஒலியியல்

**ஆரம்பம் : 1-4-88 வெள்ளி**

## வடமராட்சியில் புதிதாக அரண்கள்

கரவெட்டி, மார்ச் 29

வடமராட்சியில் இந்திய அமைதிப் படையினர் பல இடங்களில் புதிதாக அரண்களை அமைத்து முகமிட்டுள்ளனர்.

குஞ்சர்கடையில் ஒரு அரண் அமைக்கப்பட்டது.

மாலிசந்தி, வியாபாரிமூலை வீதியில் இரண்டு இடங்களில் அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைதிப்படையினர் வாகன சகளைச் சோதனையிட்டு வருகின்றனர்.

கடற்கரையால் செல்ல வேண்டிய வாகனங்கள் பருத்தித்துறை இராணுவ முகாம் காரணமாக ஓராண்டுக்கு வியாபாரிமூலை சென்றே கடற்கரை வீதியைப் பயன்படுத்தி வந்தன.

தற்போது வியாபாரிமூலை அரண் காரணமாக இராணுவ சோதனையை எதிர்நோக்க வேண்டி உள்ளது. (இ-70)

சினிமாக்......

வேண்டும் அதுதான் முக்கியம்.

கேள்வி:- பலமுறை மத்திய அமைச்சர் பதவி கொடுத்த போதும் வேண்டாம் என்று சொல்லியிருந்தீர்கள் அதற்குக் காரணம். "நான் ஆட்சிப் பொறுப்பில் ஒரு பதவி ஏற்பதாக இருந்தால் அது தமிழ்நாடு முதலமைச்சர் பதவிதான்" என்று சதம் செய்தி பத்திரிகைப் பலர் பேசுகிறார்களே?

பதில்:- சபதங்கள் எல்லாம் ஒன்றுமில்லை காங்கிரஸ் மீண்டும் தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு அதை இல்லையென்று செய்யவில்லை.

கேள்வி: எம் ஜீ ஆருக்கு பாரதரத்ன பட்டம் கொடுத்துவிட்டு, அவர் மனைவி ஆட்சியை காங்கிரஸ் கவிழ்த்துவிட்டது என்று மக்கள் பேசுகிறார்களே?

பதில்: பாரதரத்னா கொடுத்தது எம் ஜீ ஆருக்கு ... ஜீ ஆர் மனைவி கு ... ல (உ-உ)


அகில இலங்கை பரஸ்பர
சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்

வாக்குறுதிகள் காற்றில் விடப்படுகின்றன
காப்புறுதிகளோ நாககுறுதியிழந்து
போகக்குறுதி பேசி கயிறு விடுகின்றன
நமக்குறுதி கூற யாருண்டு என ஏங்க
எமக்குறுதி நாமே எனக் கூறி
தீர்க்கதரிசி போல் உங்கள் முன்
திண்மையான தோளோடும்
திட்சண்ய பார்வையோடும்
திரமிக்க தலைவனைப் போல்
நிமிர்ந்து நிற்கின்றது.

அகில இலங்கை பரஸ்பர
சகாய நிதிச் சங்கம்

உடன் தொடர்பு கொள்ளவும்:
தபாற் கந்தோரடி,
வட்டுக்கோட்டை


விளையாட்டரங்கு

ஷார்ஜா கிண்ணம்

## இந்திய அணிக்கு இரண்டாவது வெற்றி

### மொகிந்தர் - சித்து சிறப்பாட்டம்

ஷார்ஜா, மார்ச் 29

ஷார்ஜா கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்திய அணி நியூசிலாந்து அணியை 73 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது.

சிறப்பாக ஆடிய மொகிந்தர் அமர்நாத் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும், நவ்ஜோத் சிங் சித்து 88 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதற்கு முன்னர் நடைபெற்ற இலங்கை அணிக்கெதிரான ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றி பெற்றது நினைவிற்கொள்ளத்தக்கது. (ரொ-க)

## அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குக

### அரச அதிபருக்கு மகஜர்

கிளிநொச்சி, மார்ச் 29

★ அனைத்து தடை முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் உள்ள சகல அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

★ தடை முகாம்களில் உள்ளோரின் குடும்பங்களுக்கும் விடுதலையானோரின் குடும்பங்களுக்கும் புனர்வாழ்வு கொடுக்க வேண்டும்.

தடை முகாம்களில் விடுதலையானோர் புனர்வாழ்வுக் கழகம், தமது அடையாள உண்ணாவிரத முடிவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

இந்த அடையாள உண்ணாவிரதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகப் பகுதியில் நடைபெற்றது. (உ-6)

## கையெழுந்து போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம் மார்ச் 29

தடைப்பட்ட ஜீ சி ஈ சாதாரணதர பரீட்சையை நடத்தக் கோரி மாணவர் இளைஞர் பொதுமன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்துப் போராட்டம் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கையெழுத்துவேட்டை கடந்த 26, 27ஆம் திகதிகளில் தனியார் கல்வி நிறுவனங்களிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.


இந்தக் கையெழுத்து வேட்டை அடுத்த சில நாட்களுக்கும் தொடர உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (இ-9)

### விடுதலையானோர் புனர் வாழ்வு கழகம்

தடை முகாம்களிலிருந்து விடுதலையாகி வெளியேறிய கிளிநொச்சியாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 36 பேர் தடைமுகாம்களில் விடுதலையானோர் புனர்வாழ்வுக் கழகம் என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி உள்ளனர்.

இதன் தலைவராக திரு த சுரேஸ் என்பவரும், செயலாளராக திரு க. விஜயன் என்பவரும், பொருளாளராக திரு பூபாலநாதன் என்பவரும் தெரிவாகியுள்ளனர். (இ-76)


## 91ஆவது நாள் நினைவஞ்சலி



மலர்வு:
30-11-1961
★
உதிர்வு:
30-12-1987

**செல்வன் கணேசன் சண்முகம் [சின்னபாபு]**


எங்கள் அன்புக்கினிய இளைய மகனே
யாழ் நகரக் கொந்தளிப்பில்
தப்பி மீண்ட உன்னுயிரை
வெள்ளவத்தைக் கடற்கரையில்
ரயில் உருவில் வந்த காலன்
கவர்ந்து சென்றானோ?
என்ன மாயம் ஐயா!
உன் தியாக உணர்வையும்
நண்பர்களுடன் பழகும்
இனிய பண்பையும்
உதவி என்று கேட்குமுன்
செய்துமுடிக்கும் உன் ஆற்றலையும்
குழந்தை மனத்தையும்
எப்படித்தான் நாம் மறப்போம்
கண்ணின் மணியாக
உன்னைக் காத்தோம்
கனவுபோல் நீ
மறைந்த மாயம் என்ன?

உன் அன்பான நினைவுகளால் அனுதினமும் உருகிவாடும்
பப்பா, அம்மா, அண்ணா அக்கா, அத்தான்
அன்பு மருமகள்
உன் ஆத்ம சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோர்கள்

108, பிறவுண் வீதி, நீராவியடி
யாழ்ப்பாணம். (2194)



## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



**பகாலிங்கம் - அகிலன்**
(அப்பச்சி)

அன்னையின் மடியில்: 15-8-71
இறைவன் அடியில்: 2?-12-87

கருணைக் கடவுளின் குழந்தாய், என்ன குறை மகனே, எங்கள் ஆருயிர் சகோதரா, குடும்பத்தின் ஒரு மகனாய், சிறப்பின் நிறைமதியாய் திகழ்ந்தாயே, குருவி கூட்டை விட்டுப் பறப்பது போல தமிழ்க்கூட்டை விட்டுப் பறந்தீரோ! துணிவோடு பயமறியாது கடவுள் தந்த ஜீவனை அர்ப்பணித்தீரோ! சிறுவயதில் தந்தையை இழந்தும் அம்மா சகோதரிகளை மறந்தீரோ! உன் பிஞ்சு மனம் என்ன பாடுபட்டதோ! நிலையில்லாத உலகில் உன் நினைவை மட்டும் விட்டுச் சென்ற என் கண்மணியே உமது ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உனது நினைவால் வாடும்
அம்மா, சகோதரிகள், உறவினர்
சகோதரிகள், பாமினி தாரிணி

விமன்காமம்,
தெல்லிப்பழை. (2215)



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 07-12-1?5? உதிர்வு: 14 03 1984

திதி 29-3-1988

**ஐயம்பிள்ளை ஜெயக்குமார்**

(தொழில்நுட்பவியலாளர்)

உள்ளூராட்சி திணைக்களம் - முல்லைத்தீவு
உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

'உதயபவனம்', சண்டிலிப்பாய் — அன்பு அப்பா அம்மா தம்பிமார் தங்கை

1-52



## முதலாவது சிராத்த தினம்

அமரர் சிவகுரு தயானந்தன்
(பவர்கல)

மலர்வு
11-8-1941

உதிர்வு
10-4-1987



திதி 29-3-88

தாயையும் குணமும் கொடையும் தாகவும் தங்களையே என்றும் நினைவூட்டிய வண்ணம் இருக்கின்றன. தங்களது ஆழ்ந்த அன்பும் பிரதிபலன் கருதாத நேசமும் எம்மை வழிநடத்துகின்றன. தங்கள் தளரா முயற்சியும் உறங்கா உழைப்பும் எமக்குத் துணையாம். நினைவில் என்றும் நிரந்தரமானவர் நீங்கள்.

அன்புள்ள
சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்

பிருந்தாவனம்
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி. (21?1)



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
26-7-1945
★
மறைவு:
14-3-1986



**செ. சின்னராசா**

ஈராண்டு வந்தாலும்
எம் இதயப் பொய்கையிலே
நீ வாழும் காட்சிதனை
நினைத்திட்டால் சின்னண்ணா உன்
காரோடும் தெருவினிலே - எம்
கண்களிலே நீரோடும்.
வேரோடு வீழ்ந்த ஒரு
விருட்சத்தின் நினைவோடும்
பேரோடு நீ வாழ - மீண்டும்
பிறந்து வரமாட்டாயா?

வேலணை மேற்கு — தாய், சகோதரர்கள்

(2131)



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
25-2-1939

மறைவு
10-4-1987



**அமரர் சுப்பையா இராசசூரியர்**

எமது அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இறைவனடி சென்று ஒரு ஆண்டு சென்றாலும் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி
சகோதர சகோதரிகள்
மைத்துனர்மார்
மைத்துனிமார்
உறவினர்கள்

மாதகல் வடக்கு,
மாதகல்.

(2680)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயசங்கற்பம்

மனிதர்கள் சத்தியத்தில் அழகைக் காணத் தொடங்கும் பொழுதெல்லாம் உண்மையான கலை உதயமாகும்.

— காந்திஜி


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-393/3 நாவலர் வீதி, தொலைபேசி: 24606, 22073
யாழ்ப்பாணம்.
29.03.1988


## உண்மையை உணர்தல்

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முரணாக, ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டு, மூன்று மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஈரோஸ் பிரமுகர் திரு. ஹரன் விடுவிக்கப்பட்டுவிட்டார்.

ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் இருந்தே; இணங்கப்பட்ட பல அம்சங்களுக்கு முரணாக இலங்கை அரசாங்கம் நடந்து கொண்டு வருகிறது. ஆயுதங்களை ஒப்படைத்த போராளிகளுக்கு பொதுமன்னிப்பு, சிறையில் உள்ள தமிழ் அரசியற் கைதிகளை விடுவித்தல் ஆகியவற்றைச் செய்ய மனமில்லாமல் இழுத்தடிக்கிறது. தமிழ்ப் போராளிகளை முடக்கிவிட்டுத் தான் நினைத்த காரியத்தைச் சாதிப்பதே அதன் முழு நோக்கமும், முழு முயற்சியுமாகும்.

இதனை இந்தியா நிச்சயம் புரிந்துகொண்டிருக்கும். ஆனால் இலங்கையின் ''காதில் முறுக்கிக் கேட்கும்'' நிலையை அது விரும்பவில்லை என்பது இதுவரை தெளிவாகத் தெரிந்தது.

1987 அக்டோபர் முதல் வாரத்தில் கைது செய்யப்பட்ட 17 தமிழ்ப் போராளிகளையும், கொழும்புக்குக் கொண்டுவர வேண்டும் என இலங்கை அரசு விடாக்கண்டன் நிலையில் இருந்தபோது, அந்தச் செயல் ஒப்பந்தத்துக்கு முரணானது என்று இலங்கை அரசின் தலையில் குட்டிச் சொல்வதற்கு இந்தியா விரும்பவில்லை.

அதே போக்கினால்தான் திரு ஹரனும் மூன்று மாதங்கள் தடுப்புக் காவலில் காலத்தைக் கழிக்க நேர்ந்தது.

ஆனால் ஒப்பந்தமீறல் விடயத்தில் இந்திய அரசு இப்போது சற்றுத் தெளிவான நிலைக்கு வந்திருப்பதாக ஊகிக்க முடிகிறது. ஹரன் விடுவிப்புச் சம்பந்தமாக ஈரோஸ் இயக்கம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் இருந்து அந்த நிலைப்பாட்டை உணர முடிகிறது.

அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்த விடயத்தில் இரண்டு அரசுகளுக்கும் இடையில் நடைமுறை ரீதியான பிணக்கொன்று ஏற்பட்டிருப்பதாக வெளிப்படையாக, எழுத்து மூலம் இந்திய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

உள்ளதை, உண்மையைச் சொல்வது எப்போதும் நன்மையைத் தரும். அந்த வகையில் இந்திய அரசு வெளிப்படையாகச் சொன்னதை வரவேற்கிறோம்.

ஆனால், இந்தப் பிணக்கு நீடிக்குமானால் ஒப்பந்த அமுல் என்னாவது?

கிழக்கில் சிங்கள மக்களுக்கு இலங்கைப் பாதுகாப்புப் படையும், தமிழர்களுக்கு இந்திய அமைதிப்படையும் பாதுகாப்பு என்ற நிலைமை உருவான பின்னர்தான் ஒப்பந்த அமுலில் பிணக்கு நிலை இருப்பதை இந்தியா உணர்ந்து கொண்டதா என்ற கேள்வி எழுவதும் இயல்பு. அல்லவா?

நிலைமை எதுவானாலும் ஒப்பந்தத்தைச் சரிவர அமுல் நடத்துவதற்கு ஒத்துழைக்குமாறு இலங்கை அரசைத் தூண்டுவதும், கருத்து வேறுபாடுகளைக் களைவதும் இந்தியாவினது பொறுப்பேயாகும்.

இந்தியா அதனைச் செய்தால் மட்டுமே, செயலில் காட்டினால் மட்டுமே தமிழ் மக்கள் தரப்பில் இந்தியா மீது முழு நம்பிக்கை உருவாக வழிபிறக்கும். இந்திய அரசும், பிரதமர் ராஜீவும், அவரது உயர் அதிகாரிகளும் இதனை உணர்வார்களா என நம்பலாமா?

## சிறப்பாக நடந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 29

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் 7ஆம் ஆண்டு ஞாபகார்த்ததின விழா கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி ஆதீனத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

சமாதிக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத லிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பஞ்ச புராணம், திருமுறைப் பாராயணம், மகேஸ்வர பூஜை ஆகியன நிகழ்ந்தது.

மாலை நிகழ்ச்சியாக திரு. வேலாயுத பிள்ளையின் இசைக் கச்சேரி இடம்பெற்றது. பாக்கியலக்ஷ்மி நடராசா வயலினும் ஜெ சர்மா மிருதங்கமும் அ. ஸ்ரீநிவாசன் கடமும் வாசித்து விழாவைச் சிறப்பித்தனர். (இ)



பொய்யாமொழி

குறள்:

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

பொருள்:

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும்.

பங்களாதேஷ்:

# பதினைந்து தினங்களில் பதவி துறக்க வேண்டும்

## எர்ஷாத்துக்கு காலக்கெடு

டாக்கா, மார்ச் 28

பங்களாதேஷ் ஜனாதிபதி முகமட் எர்ஷாத் பதினைந்து தினங்களில் பதவி துறக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் காலக்கெடு விதித்துள்ளன.

தவறின் காலவரையறையற்ற பொதுவேலை நிறுத்தம் நடைபெறும் என்றும் எதிர்க்கட்சிக் கூட்டணிகள் எச்சரிக்கையும் விடுத்துள்ளன.

இதன் மத்தியில் அதிபர் முகமட் எர்ஷாத் அமைச்சரவையைக் கலைத்து விட்டார்.

புதிய அமைச்சர்கள் பட்டியலை ஜனாதிபதி நேற்று அறிவித்தார். புதிய அமைச்சரவையில் முப்பது பேர் உள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிபரின் ஆளும் கட்சிக்கு 250 ஆசனங்கள் கிடைத்தன.

நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 300 ஆகும். (எ)

## வளைகுடாவில் இந்தியக்கப்பல் தாக்கப்பட்டது

தெஹ்ரான், மார்ச் 28

வளைகுடாவில் இந்திய எண்ணைக்கப்பல் ஒன்று கடந்த ஞாயிறு ஈரானிய பீரங்கிப் படகுகளினால் தாக்கப்பட்டது.

24,529 மெட்ரிக் தொன் எடை கொண்ட இந்தக் கப்பலின் எஞ்ஜின் அறை சேதமடைந்தது. ஒரு மாலுமி காயமடைந்தார்.

கப்பல் தீப்பற்றியது என்றும் அறிவிக்கப்பட்டது. (எ)

## காஸா கலவரம் தொடர்கின்றது

ஜெருசலம், மார்ச் 28

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் கலவரம் தொடர்வதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி 4 பலஸ்தீனியர் இஸ்ரவேல் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது (எ)

## ஒரு நட்சத்திரம் உதிர்கின்றது!

லண்டன், மார்ச் 28

ஒரு நட்சத்திரம் உதிர்ந்து கொண்டு இருக்கின்றது.

வானவெளியில் உள்ள கறுப்புப் பொந்து ஒன்றை நோக்கி அந்த நட்சத்திரம் சென்று கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் வானசாஸ்திர நிபுணர் ஒருவர் அறிவித்திருக்கின்றார்.

இந்த அரிய சம்பவம் பற்றி உலகம் முழுவதும் உள்ள வானவியல் நிபுணர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நட்சத்திர மண்டலத்தில் மின்னிக்கொண்டிருந்த ஒரு நட்சத்திரத்துக்கே இந்தக் கதி ஏற்பட்டு உள்ளதாம்.

வானவெளியில் உள்ள கறுப்புப் பொந்து, ஓர் சிறந்த நட்சத்திரம். சூரியனிலும் பார்க்க பல மடங்கு பெரியது இது. அதன் ஆகர்ஷண சக்தியில் இருந்து எதுவுமே தப்ப முடியாது.

வளைகுடா யுத்தம்:

# விமானத்தில் இருந்தும் ஏவுகணைத் தாக்குதல்!

## தெஹ்ரான் மீது ஈராக் நடத்துகின்றது

தெஹ்ரான் மீது ஈராக் படைகள் விமானத்தில் இருந்தும் ஏவுகணைகளை ஏவியது.

இதுவரை 120 ஏவுகணைகளை ஈராக் தெஹ்ரான் மீது ஏவியதாக அங்கிருந்து வந்த மேற்குப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேரில் சேகரித்த தகவல்களை அவர் வெளியிட்டார்.

ஏவுகணைத் தாக்குதலால் தெஹ்ரானில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று அப்பத்திரிகையாளர் தெரிவித்தார்.

சக்தி மிகுந்த ஏவுகணைகளை வானில் இருந்தும் பாவிக்கக்கூடிய திறமையை ஈராக் பெற்று இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

## கொலம்பியாவில் எரிமலை ஒன்று வெடிக்கப் போகிறது!

கொலம்பியா மார்ச் 28

கொலம்பியாவில் உள்ள நவேடா டெல் ரில் எரிமலைப் பிரதேசத்தை விட்டு வெளியேற ஆயிரக்கணக்கான மக்கள் மறுத்து விட்டனர்.

எரிமலை வெடிக்க இருப்பதால் அப்பிரதேசத்தை விட்டு உடனடியாக வெளியேறும்படி கொலம்பிய அரசு அப்பகுதி மக்களுக்கு உத்தரவு விடுத்தது.

''எமக்கு வேறு இடமில்லை'' என்று கூறி மக்கள் அரசு உத்தரவைப் புறக்கணித்து விட்டனர்.

எரிமலையின் நடவடிக்கையைக் கண்காணிக்க அரசு அவசரகாலக் கமிட்டி ஒன்றை நியமித்திருக்கின்றது.

1985 நவம்பரில் இந்த எரிமலை வெடித்ததினால் ஒரு பட்டினமே அழிந்தது. சுமார் 23 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். (எ)

## சீதனம் கேட்டவருக்குச் சீட்டுக்கிழிப்பு

புவனேஸ்வர், மார்ச் 28

சீதனம் கேட்டுப் பெற்ற இந்தியப் பொலிஸ் அதிகாரி ஒருவருக்குச் சீட்டுக் கிழிக்கப்பட்டது.

ஒரிஸ்ஸா சட்ட சபையில் முதலமைச்சர் ஜே.பி. பட்நாயக் இத்தகவலை வெளியிட்டார்.

சீதனம் கேட்டுத் திருமணம் செய்தது, சீதனம் காணாது என்று கூறி மனைவியைத் துன்புறுத்தியது ஆகிய குற்றங்களுக்காக எஸ். எல். முகர்ஜி என்ற அந்த அதிகாரி பதவி நீக்கஞ் செய்யப்பட்டார்.

## ராஜீவின் மே. ஜேர்மன் பயணம்

பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கு ஜேர்மனிக்குக் கோடை கால விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கின்றார்.

கடந்த ஆண்டு மேற்கு ஜேர்மன் செல்ல பிரதமர் திட்டமிட்டிருந்தார். நாட்டில் ஏற்பட்ட வரட்சிகாரணமாக அவ்விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. (எ)

தங்கராஜு பிரச்சினை

## 5 லட்சம் ரூபா லஞ்சம் ஆதாரமற்ற கற்பனை

### ஜெயலலிதா - பதில்

அ. தி. மு. க. எம். பி. தங்கராஜுக்கு ஐந்துலட்சம் ரூபா கொடுத்தது என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு ஆதாரமற்றது, நம்ப முடியாதது.

அ. தி. மு. க. (ஜெ) பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா முன்சண்டவாறு தெரிவித்தார்.

தங்கராஜு சம்பவம் ஜானகி அணியினால் உருவாக்கப்பட்ட தொன்று. ஐந்துலட்சம் ரூபா பணத்துடனான பெட்டியைத் தங்கராசு எம். பி. நாடாளுமன்றத்தில் கொண்டுபோய்ச் சமர்ப்பித்து உள்ளார்.

இது நாடாளுமன்றச் சட்டத்துக்கே முரணானது.

தங்கராசுவைக் கைது செய்யும்படி சபாநாயகர் உத்தரவிட்டிருக்க வேண்டும். ஆனால் சபாநாயகர் அப்படிச் செய்யவில்லை.

இப்படி செல்வி ஜெயலலிதா சொன்னார். (எ)

யார் மாவட்டத்திலிருந்து தெரிவான

# விஞ்ஞான-கணித ஆசிரியர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 29 (நேற்றைய தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் இருந்து விஞ்ஞான—கணித ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களின் 10 பெயர்கள் நேற்றைய உதயனில் வெளிவந்தது.

இன்று மிகுதிப் பெயர்கள் இங்கு பிரசுரமாகின்றன.

செல்வி எம். ஜெயபவானி, வட்டுக்கோட்டை, திரு ஆர். இரத்னகுமார் பருத்தித்துறை, திரு எஸ் பிரபாகரன் இளவாலை, செல்வி ரி புஸ்பவதி காரைநகர், செல்வி எஸ். சோமசுந்தரம் யாழ்ப்பாணம், செல்வி பி ரேணுகா சரவெட்டி, செல்வி எஸ் சௌசலயா யாழ்ப்பாணம், திரு. கே குகநாதன் புலோலி, செல்வி வி. யோகமணி பண்டத்தரிப்பு, செல்வி ரி பானுமதி இளவாலை, செல்வி வி. வனிதா சுளிபுரம், செல்வி எம். வேலுப்பிள்ளை சுளிபுரம், செல்வி ஆர் ஜபந்தினி கோப்பாய், செல்வி வி வசந்தரூபா அச்வாய், செல்வி ஆர். சிவபாதசுந்தரம் கரவெட்டி, செல்வி ஜே ராதா கோண்டாவில், செல்வி எஸ் சாந்தினி தெல்லிப்பளை, திரு சி. விக்கினேஸ்வரன் புலோலி, செல்வி ரி. தபாபரி அச்சுவேலி, செல்வி பி ஜீவிதா பருத்தித்துறை, செல்வி ஏ தர்மினி யாழ்ப்பாணம். செல்வி டி. சி. சாள்ஸ் ஊர்காவற்றுறை, செல்வி கே. ரதிதேவி கொக்குவில்.

செல்வி ரி பரிபூரணேஸ்வரி சாவகச்சேரி. செல்வி ரி. விமலேஸ்வரி புங்குடுதீவு, செல்வி என். கயிலைராணி நீர்வேலி, செல்வி எஸ். வானதி யாழ்ப்பாணம். செல்வி ரி விமலாதேவி வசாவிளான், செல்வி எஸ். ஜெயமதி கைதடி, செல்வி ரி. அருள்மதி கரவெட்டி, செல்வி ஆர் கிருஷ்ணமணி வட்டுக்கோட்டை, செல்வி எம் திவ்வியலோசனி சுளிபுரம், செல்வி ஜி சூசைப்பிள்ளை இளவாலை, செல்வி எம் ஏ. வெஸ்கா யாழ்ப்பாணம், செல்வி எஸ். மலைமகள் கொக்குவில், திரு. எஸ் பாஸ்கரன் கரவெட்டி, செல்வி எஸ். மஞ்சுளா சித்தன்கேணி

செல்வி எஸ். ஜெபவாணி காங்கேசன்துறை, செல்வி கே. சண்முகநாதன் கைதடி செல்வி வி. கோகுலராணி பருத்தித்துறை, செல்வி எஸ் சத்தியதேவி மல்லாகம், செல்வி எஸ் சிவாஜினி யாழ்ப்பாணம், செல்வி எஸ் ஜெயரதி வட்டுக்கோட்டை

திரு ரி கணேசலிங்கம் சுளிபுரம், செல்வி கே சௌந்தரதேவி யாழ்ப்பாணம், செல்வி வி உதயகுமாரி உடுப்பிட்டி, திரு கிருபஞ்சன் புலோலி, திரு எஸ் லோகநாதன் கரவெட்டி, திரு எஸ் ஜெயகணேசன் சாவகச்சேரி, செல்வி வி சத்தியவதி சாவகச்சேரி.

செல்வி ரி. தேவகி, வேலணை, திரு ரி கே. முரளீதரன், நயினாதீவு செல்வி ரி ஜயந்தினி யாழ்ப்பாணம், திரு. எஸ் ரவிச்சந்திரன், வட்டுக்கோட்டை, திரு. எஸ் நாகரத்தினம், காரைநகர், செல்வி. எம் எஸ் லட்சுமி பிரபா, யாழ்ப்பாணம், திரு எஸ் வின்சன் மரியதாஸ் பருத்தித்துறை. செல்வி எஸ் சிதம்பரப்பிள்ளை, அச்சுவேலி, செல்வி என் கலாவதி, கரவெட்டி செல்வி. எஸ் சத்தியதேவி, யாழ்ப்பாணம், செல்வி ரி புஸ்பலதா புத்தூர், செல்வி கே மனோரஞ்சிதம், காரைநகர், செல்வி. கே. யோகாம்பிகை, கரவெட்டி, செல்வி. பி. யோகசௌரி, அரியாலை செல்வி எம். எ எஸ். டெடிக். மாதகல்,

நுவரெலியா மாவட்டம்

செல்வி பி பிரேமலதா வட்டுக்கோட்டை, செல்வி கே சந்திரவதனி வட்டுக்கோட்டை, செல்வி ஏ கல்யாணி வல்வெட்டித்துறை, திரு. எ. தேவகசன் பண்டத்தரிப்பு, செல்வி எஸ். சத்திவேல் டிக்கோயா, செல்வி எஸ். சத்தியபாமா சண்டிலிப்பாய் செல்வி வி பவானி அச்சுவேலி,

கொழும்பு மாவட்டம்

செல்வி கி ஈ ர ஜகுமாரி ஜெயராஜ் மிருசுவில்

பொலன்னறுவ மாவட்டம்

செல்வி எ. முரலேஸ்வரி மட்டுவில் தெற்கு,

மட்டக்களப்பு மாவட்டம்

செல்வி ரி மதிவதனா கோண்டாவில்,

கம்ஹா மாவட்டம்

திரு வி பாலச்சந்திரன் வட்டுக்கோட்டை

(முற்றும்)

(இ-உ)

## ஸ்கந்தா மாணவனுக்கு 4வது இடம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவன் புவனேந்திர நாதன் ஆதவன், அகில இலங்கை ரீதியில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி பரீட்சையில் இவர் மொத்தம் 695 புள்ளிகளை எடுத்துள்ளார். (ஒ க)

# கிளிநொச்சி மக்களின் ஒத்துழைப்பால் ஹர்த்தால் வெற்றி

## ரெலோ அறிக்கை

கிளிநொச்சி, மார்ச் 29

கிளிநொச்சி வாழ்மக்களின் பூரண ஒத்துழைப்பினால் இங்கு நடைபெற்ற ஹர்த்தால் வெற்றி பெற்றது.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு

✱ ஈழப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழ் சிங்கள அரசியல் கைதிகள் மகசின் சிறையில் தம்மை விடுதலை செய்யக்கோரி நடத்தும் சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு தங்கள் ஆதரவை தெரிவித்து அவர்களை உடன் விடுதலை செய்யக்கோரியும்

✱ ஈழத்தில் தொடர்ந்து நீடிக்கும் இலங்கை ... பதவிவெறி சுயநலங்களுக்காய் அப்பாவி தமிழ் சிவகள பொதுமக்களும் நிராயுதபாணிகளான இயக்கப் போராளிகளும் மற்றும் அலுவலர்கள் அரசியல் கட்சி உறுப்பினர்கள் போன்றவர்களும் அநியாயமாக படுகொலை செய்யப்படுவதை கண்டித்தும்

✱ தமிழ் ஈழவிடுதலை புலிகள் எவ்வித நிபந்தனையுமின்றி சகல ஆயுதங்களையும் இந்திய சமாதானபடையிடம் ஒப்படைத்து ஜனநாயக வழிக்கு திரும்ப வேண்டியும்

கடந்த வியாழக்கிழமை அன்று கிளிநொச்சியில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தமிழீழ ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எவ்) அன்றைய தினம் இணைந்து பூரண ஹர்த்தால் ஒன்றை நடத்தின.

அரச நிறுவனங்களும் தனியார் வர்த்தக ஸ்தாபனங்களும் கதவடைப்பு செய்தன.

பாடசாலைகள் அனைத்தும் பகிஷ்கரிக்கப்பட்டன. எவ்வித வாகன போக்குவரத்து நடைபெறவில்லை.

எவ்வித மக்கள் நடமாட்டம் இன்றியும் அமைதிக்கும் ஜனநாயகத்துக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாமல் ஹர்த்தால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

கிளிநொச்சி வாழ் மக்கள் அனைவரும் ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியதால் இந்த இரு இயக்கங்களும் நடத்திய ஹர்த்தால் பூரண வெற்றி பெற்றது

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 764 இலக்கப் பாதையில் சேவை நடத்த முயற்சி

யாழ்ப்பாணம் மார்ச் 29

பலாலி காங்கேசன்துறை 764 இலக்கப் பாதையில் வாகனங்களை சேவையில் விடுவதற்கு காங்கேசன்துறை பலாலி பஞ்சாயத்து சபையினர் இந்திய அமைதிப்படையினரிடம் அனுமதி கோரியுள்ளனர்.

பாதுகாப்பு காரணங்கள் காரணமாக இப்பாதை இந்திய அமைதிப்படையினரால் மூடப்பட்டுள்ளது.

இப் பாதை மூடப்பட்டது குறித்து இப்பகுதி மக்கள்பெரும் அதிருப்தி தெரிவித்ததன் காரணமாகவே மேற்படி பஞ்சாயத்து சபையினர் அமைதிப்படையினரிடம் அனுமதி கோரியுள்ளனர்.

(இ-9-10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தரமான கறுப்பு வெள்ளைப் படங்கள்
கலர்ப் படங்கள் மற்றும்
வெளிப்புற கலர்ப்படங்களுக்கு
சிறந்த இடம்:
ஸ்ரூடியோ தனம்ஸ்
609, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

29.03.1988 செவ்வாய்க்கிழமை

தரமான கறுப்பு வெள்ளைப் படங்கள்
கலர்ப் படங்கள் மற்றும்
வெளிப்புற கலர்ப்படங்களுக்கு
சிறந்த இடம்:
THANAMS
PHOTOGRAPHERS
609, K. K. S. Road,
Jaffna.

# வடபகுதிக்கு தொலைத்தொடர்பு உடன் வழங்கப்படும்

## அமைச்சர் சுனில் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 29

வட மாகாணத்துக்கு பத்து லைன்களைக் கொண்ட தொலைத் தொடர்பு சேவையை உடனே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே இச்சேவை பயன்படுத்தப்படும்.

தபால், தொலைத் தொடர்பு அமைச்சர் திரு சுனில் அபயசுந்தர இதனைத் தெரிவித்தார்.

கடுகண்ணாவையில் நடந்த கூட்டம் ஒன்றில் அமைச்சர் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் வன்செயல்கள் குறைந்துள்ளன.

திருகோணமலையும் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது.

அங்கும் தொலைபேசித் தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட உள்ளன.

இப்படி அமைச்சர் சொன்னார். [ஒ-எ]

## திருமலை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எனத் தடுக்கப்பட்டுள்ளனர்.

சிங்களக் கிராமங்களின் எல்லைப் பகுதிகளிலும், முக்கிய பாதைகளிலும் ஸ்ரீலங்காப்படையினர் முகாம்களை அமைத்து ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-10)

## விசேட ஜீ.சீ.ஈ ------

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யைத் தொடர்ந்து விசேட பரீட்சை நடத்துவது சம்பந்தமாக சாதகமான முடிவு எடுக்கப்படும் எனவும்-

அது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்பு இரண்டொரு தினங்களில வெளியிடப்படும் எனவும்- நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

தடைப்பட்ட ஜீ. சி. ஈ. பரீட்சையை நடத்துவது சாத்தியமில்லை என்றும்-

மாணவர்களை ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்புக்கு அனுமதிக்க வகைசெய்யும் விதத்தில் மாவட்ட மட்டத்தில் மட்டும் ஒரு பரீட்சையை நடத்துவது என்றும் கல்வி அமைச்சு அறிவித்திருந்தது:

அரசாங்கத்தின் இந்த முடிவுக்குபாடசாலை அதிபர்களும்பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் மாணவர்களும்கடும் ஆட்சேபம் தெரிவித்து வருவது தெரிந்ததே. (அ-ஒ-9)

## அடகு நகை----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நடவடிக்கை பூரணமாக வெற்றியளிக்கும் பட்சத்தில் அந்தந்தப் பகுதிகளில் உள்ள வங்கிக் கிளைகளில் வைத்த நகைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மக்கள் வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்

முன்னர் அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின் படி இன்றும் மீளளிப்பு வேலைகள் நடைபெறும். (ஒ-க-9)

## ஐம்பதினுயிரம்-----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்சை நடத்தக் கோரும் மகஜர்களைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பின.

ஆனால் அதற்குத் தக்க பலனோ, அல்லது பதிலோ கிடைக்கவில்லை.

அதனால் நாம் இந்தக் கையெழுத்து இயக்கத்தை நடாத்தினோம்.

இந்த இயக்கம் மேற்படி பரீட்சை நடைபெறுத அனைத்து இடங்களிலும் நடாத்தப்பட்டது. மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் இதில கையொப்பம் இட்டுள்ளனர்.

இந்தக் கையெழுத்து இயக்கம் மூலம் நாளைய எமது சிற்பிகளின் கல்விக்கு மேம்பாடும் உயர்வும் கிடைக்கும் என எண்ணங்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-க)

## "சீசன்" வழங்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச்29

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் "சீசன்" டிக்கட்டுக்கள் நேற்று முதல் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாரந்து வந்தவர்களுக்கான "சீசன்" கள் யாழ் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக கருமபீடத்தில வழங்கப்பட்டு வருகிறது.

காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணி வரை சீசன்களைப் பெறலாம்.

இதேவேளையில் பாடசாலை விடுமுறை ஆரம்பமாவதால் மேமாதம் முதலே பாடசாலை சீசன்கள் விநியோகிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-9)

## தென்மராட்சி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டும் -

போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே நாளைய தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது

ஹர்த்தால் தினத்தன்று சகல வர்த்தக நிறுவனங்களும், தொழில நிறுவனங்கள், போக்குவரத்துச் சேவை ஊழியர்கள், மற்றும் பொதுமக்கள் சகலரும் ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர் ஒருங்கமைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ 10)

எமது புதிய வெளியீடுகள்

(1) காலஞ்சென்ற இசைமேதை
சீர்காழி கோவிந்தராஜனின்
'லண்டன் கச்சேரி'

(2) T. R. மகாலிங்கம் -
பண்டரிபாய்
"மாலையிட்ட மங்கை"

(3) M.G.R. - T.R. ராஜகுமாரி
"அரசிளங்குமரி"

என்றும் தரமான பிரதிகளுக்கு

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா

உடன் தேவை

1. Welders - 3
2. Aluminium Fabricators - 3
3. Security Officers (Super Market) - 5
4. Cashiers (Super Market) - 5

2 கிழமைக்குள் ஒழுங்குகள் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு:

A. தவச்செல்வம்
காணுவன் சந்தி, சுழிபுரம்.

K. லிங்கம்
காணுவன் சந்தி, சுழிபுரம்.

## நீத்தார் பட்டியல்

### திருமதி சுந்தரம் மயில்வாகனம்

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த திருமதி சுந்தரம் மயில்வாகனம் 27-3-88 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற புலோலி மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தென் புலோலி சத்தியமூர்த்தி, சத்தியபாலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி (நைஜீரியா), கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், கோசலா (யாழ். மருத்துவ பீட விரிவுரையாளர்), ஸ்ரீகுகன் (லண்டன்), வாசுகி, முகுந்தன், துரைராசசிங்கம் (கொனுகொல ம. ம. வி.), கோபிநாதன் (நைஜீரியா), கோமதி (மதராஸ்), சுமதி (மதராஸ்) ஆகியோரின் அன்புப் பேத்தியும் துவாரகாவின் அருமைப் பீட்டியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 28-3-88 இல் நேற்று சுன்னாகத்தில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
[2228] ம. சத்தியபாலர்

### திரு வல்லிபுரம் மாணிக்கம்

சரவணை மேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் மாணிக்கம் 27-3-88 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கொட்டக்காடு சின்னத்துரை, அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், செல்வலெட்சுமியின் அன்புக் கணவரும், வசந்திமாலா, சொர்ணமாலா, சத்தியமாலா, அருந்தவராசா (கண்ணன்) வர்த்தகர் கொழும்பு, சர்வானந்தராசா (காந்தி ஸ்ரோர், கொழும்பு) புவிராசா, மகாராசா, கொழும்பு ஸ்ரீமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தலிங்கத்தின் மாமனும், தர்சிகாவின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-3-88 நாளை புதன்கிழமை 4மணி அளவில் சரவணை மயானத்தில் நடைபெறும். (2290)

### திரு. சிதம்பரப்பிள்ளை கந்தப்பு

திரு. சிதம்பரப்பிள்ளை கந்தப்பு காலமானார்.

இவர் முன்னை நாள் பிரதம தபால் கந்தோர் தரம்பிரிப்பாளரும், தச்சன் தோப்பு விநாயகர் ஆலய மனேச்சரும், மீனாட்சிப் பிள்ளையின் கணவரும், ஆனந்தக்குமாரசாமியின் [சாந்தன் நெசவாலை, நெல்லியடி] தகப்பனும், தவமணிதேவியின அன்பு மாமனும் ஆவர். இவர் 28-3-88 திங்கட் கிழமை காலமானார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்


கன்னாதிட்டி தகவல்:
[2237] ஆனந்தக் குமாரசாமி

### திரு. வ. வ. கைலாசபிள்ளை

முன்னை நாள் கொக்குவில் கோண்டாவில் கிராமசபை உறுப்பினரும், கோண்டாவில் வடக்கு "கமலாம்பிகா பவனம்"தைச் சேர்ந்தவருமாகிய திரு வ. வ. கைலாசபிள்ளை அவர்கள் 28-3-88 இல காலமானார். இவர் பார்வதத்தின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம், சந்திரகுலசிங்கம் [யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள்], தேவர்குலசிங்கம் [பிரான்ஸ்], குமாரகுலசிங்கம் (கத்தார்), குபேரகுலசிங்கம் [கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்], கமலாம்பிகா, நிமலாம்பிகா, மீனாம்பிகா (யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தம்பித்துரை, தங்கராசா, சந்திரமலர், புஸ்பலீலா ஆகியோரின் மாமனும், கோகிலரூபன், காந்தரூபன், குமணன், உஷாலினி, தர்ஜீதா, கோகிலவரதன், தீபன், சர்மிளா, கௌசியா ஜீவன், தனுசியா, நிதர்சன், நிசாந்தி, கோபி, ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 29-3-88 இன்று நண்பகல் 12-00 மணிக்கு கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
(2714) குடும்பத்தினர்

## ஆறுமாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்





**கனகலிங்கம் தம்பிப்பிள்ளை**
உதவி தொழில் நுட்பவியலாளர், நீர்ப்பாசன இலாகா
திருகோணமலை.
(கொட்டடி)

தோற்றம்: 22 09 1923 மறைவு: 21-10 1987

எமது வாழ்வின் மகிழ்விற்காக
எத்தனையோ இன்னல்களைத் தாங்கி
ஏற்றம் கண்ட எமதன்புத் தெய்வமே!
காலத்தால் அழிக்க முடியாத தங்கள்
கம்பீரத் தன்மையை — கொடிய
காலன் அழித்திட்ட செய்தி கேட்டு,
கலங்கி நின்று கண்ணீர் வடிக்கிறோம்
கண்ணீரை மாலையாக்கி தங்கள் பாதமலர்க்கு
காணிக்கையாக்குகிறோம்.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**ஸ்ரீ சுதர்சகுமார் கனகலிங்கம் (ரமணன்)**
சமுநாடு (லது)
(கொட்டடி)

தோற்றம்: 22 08 1969 மறைவு: 24 10-1987

மரணங்கள் மலிந்துபோன இம்மண்ணில்
உனை இழந்து இன்றோடு
மாதங்கள் ஆறினைக் கடந்து விட்டோம்.
மழலையுடன் நீ திரிந்த நாள் முதலாய்
எம் நெஞ்சில் நிறைவாக வீற்றிருந்தாய்
இம்மண்ணை விட்டு நீ மறைந்திட்டாலும்
எம்மனதை விட்டு என்றுமே அகலமாட்டாய்
இறைவடி இணைந்திட்ட நின் ஆத்மா
அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

உன் நினைவில் வாழும்
அம்மா, அக்காமார் அண்ணமார்,
அத்தான்மார் {சற்குருநாதன, ஸ்ரீ ஆனந்தன்}
அண்ணிமார்.

நாளை 30-03-1988 புதன்கிழமை இல 401, கஸ்தூரியார் வீதியிலுள்ள (பழைய கல்விக் கந்தோர்) இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
((2231)

உரும்பராய்
கிருஸ்ண வீணா
பல் பொருள் விற்பனை நிலையம்

Welcome to Urumpirai
KRISHNAVEENA
Super Market

கட்டிடப் பொருட்கள், விவசாய உரகிருமிநாசினிகள் மின்சாரப் பொருட்கள என்பவற்றை விற்பனை செய்து வந்த

எமது ஸ்தாபனம் நாளை புதன்கிழமை (30. 3. 1988) காலை 9.30 முதல் இப் புதிய சேவையை

எமது கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு முன்பாக உள்ள கட்டிடத்தில் ஆரம்பிக்கின்றது,

அத்தியாவசியப் பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பட்டர், மாஜரின், ஜாம் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்கள், ஐஸ்கிறீம், யூஸ், மிக அவசியமான மற்றும் பொருட்கள், சைக்கிள்கள், சைக்கிளுக்குரிய உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள் பாடசாலைப் புத்தகங்கள், வார - மாதாந்த சஞ்சிகைகள், உதயன் பத்திரிகை இன்னும் பலவற்றை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். தமிழ் ஆங்கில நாவல்கள், கட்டிடங்கள் சம்பந்தமான புத்தகங்கள், Tin. Tin மற்றும் சிறுவர் நூல்கள், தகரப்பந்தல்கள், கதிரைகள் என்பவற்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களை அன்புடன் வரவேற்கும்

S. K. மனோகரரூபன்
கிருஸ்ண வீணா பல்பொருள விற்பனை நிலையம்
உரும்பராய் சந்தி, உரும்பராய்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Tuesday, 29th March 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org